வாசகர் கடிதம்

தமிழர் பண்பாடு தான்!

திரு. இரவி அருணாச்சலம் அவர்களுக்கு

தங்களின் இதுதான் காலம் கட்டுரையைப் படித்தேன். ஈழத்தமிழர்களுக்கு நிச்சயதார்த்தம் என்பது என்னவென்று தெரியாதென்றும் அது ஈழத்தமிழர் பண்பாடும் அல்ல என்றும் எழுதியிருந்திர்கள்

இது குறித்து எனது விளக்கத்தைத் தர விரும்புகிறேன்.

Engagement, இதன் தமிழாக்கம் நிச்சய தார்த்தம். ஈழத்தில் பெண்வீட்டில் மாப்பிள் ளைக்கும் பெண்ணுக்கும் பெண்வீட்டில் ரெஜிஸ் ட்டார் வந்து திருமணப் பதிவு செய்து வைப்பார்.

பதிவாளர் மாப்பிள்ளை பெண் இருவரிடமும் இப்பதிவில் இருவருக்கும் சம்மதம் உண்டா என்று கேட்பார். ஆம் என்று இருவரும் சொன்னபின் பதிவுப் புத்தகத்தில் இருவரிடமும் கையெழுத்து வாங்கிக் கொள்வார்.

பின் மாப்பிள்ளை சார்பில் இருவர் கையெழு த்தும் பெண் சார்பில் இருவர் கையெழுத்தும் இடுவார்கள். இது சாட்சிக் கையெழுத்து. அதன்பின் மாப்பிள்ளையும் பெண்ணும் மோதிரம் மாற்றி மாலை மாற்றிக் கொள்வார்கள். இவை முடிந்த பின் மதுபானம், கிடாய் கறியுடன் விருந்து. இதுதான் ஈழத்தில் நடக்கும் Engagement. இதே முறையில் தான் இங்கு லண்டனிலும் ஈழத் தமிழர் மத்தியில் நடக்கிறது.

சரி இந்த நிச்சயதார்த்தத்தை நாம் தமிழில் செய்தால் தவறா? பெண் வீட்டில் தமிழ் அர்ச்சகரை அழைத்து விநாயகர் பூசை செய்து பெண்ணின் பெற்றோரும் மாப்பிள்ளையின் பெற்றோரும் ஒருவருக்கொருவர் சம்மதம் தெரிவித்து தாம் பூலத்தட்டை மாற்றித் திருமணம் நிச்சயம் செய்து கையெழுத்திடுவர். இதற்குச் சாட்சியாக இருபகுதியிலும் இருவர் கையெழுத்திடுவர்.

அதன்பின் மாப்பிள்ளை கொடுக்கும் சேலையை பெண் அணிந்து வந்து மோதிரம் மாற்றிக் கொள்வார்கள். அதன் பின் வடை பாயாசத்துடன் (மரக்கறி) விருந்துச் சாப்பாடு. (மதுபானம், கிடாய் கறி கிடையாது)

இதில் எந்த விதத்தில் ஈழப் பண்பாடு குறைந்து விட்டது? இங்கு லண்டனில் ஈழத்தமிழர்கள் பெரியவர்கள், இள வயதினர் பண்பாட்டுச் சீர்கேட்டால் வீணாகிக் கொண்டிருக்கிறார்கள். இதனை விரிவாக விளக்க முடியும். ஆனால் அது இப்போ தேவையில்லை.

இரவி அவர்கள் உணர வேண்டியது என்ன வென்றால் ஆகா! அழகாக தமிழர்கள் கோட், சூட் போடாமல் பட்டு வேட்டி, சட்டை, சால்வை, காஞ்சிபுரம் சேலை இவைகளை அணிந்து அழகான தமிழில் எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் நிச்சயம் செய்கிறார்கள் எம் ஈழ மக்கள். இதனையே மற்ற நம் ஈழ மக்களும் தொடர வேண்டும் என்று நினைக்க வேண்டும்.

அதனை விட்டு விட்டு ஈழத் தமிழர் பண்பாட்டை மறந்தவர்கள் என்று கூறுவது சரியல்ல. இதனால் ஈழத்தமிழரின பண்பாடு எந்த விதத்திலும் குறைந்து விடவில்லை. நிறைந்தே இருக்கிறது

- திருமதி சோதி

ஏன் இந்தப் போலி வேண்டுதல்

சிங்கள அரசாங்க ஊழியர்கள், அரசியல் வாதிகள், புத்த பிக்குகள் யாவருமே யுத்தத்தில் சிங்களவர்கள் வெற்றி பெற வேண்டுமென்று புத்தபிரானைப் பிரார்த்திக்கிறார்கள்

ஆனால் தமிழ் மக்கள் எந்தத் சமயத்தைச் சேர்ந்தவர்கள் ஆனாலும் சரி சமாதானம் வேண்டித்தான் பிரார்த்தனை செய்கிறார்கள். ஏன்?

சமாதானம் என்றால் மீண்டும் அடிமை வாழ்வு வாழ்வதா?

ஏன் தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தத்தில் வெல்ல வேண்டுமென்று பிரார்த்தனை செய்வதில்லை.

சென்ற வைகாசி மாதம் என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் சென்ற வாரம் சுவிற்சர்லாந்து நாட்டிலுள்ள அத்தனை இந்து ஆலயங்களிலும் இவ்வாறான பிரார்த்தனை ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

தயவு செய்து இதனை ஒருதரம் உங்கள் பத்திரிகையில் பிரிசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- க. அன்பழகன்.

அதிலென்ன தவறு

அண்மையில் அனைத்துலக தமிழ் வானொலி யில் அவுஸ்திரேலிய சபேசன் என்பவரின் ஒரு நாட்டுப்பற்று என்ற தலையங்கத்தில் ஓர் புலம்பல் இரண்டு தடவை ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

அதில் இலங்கையின் துடுப்பெடுத்தாட்ட அணியை விமர்சனம் செய்தார்.

அதிலும் குறிப்பாக முத்தையா முரளிதரன் என்பவரின் திறமையைக் விமர்சித்தது மிகவும் கேவலம்.

உண்மையில் முத்தையா முரளிதரன் இந்திய வம்சாவழியினர். ஆனால் இலங்கையில் பிறந்த தமிழன். அவருடைய திறமையைப் பாராட்ட வேண்டுமே தவிர அதனை அரசியல் ஆக்கியருக்கக் கூடாது.

இந்தியாவில் போய் நான் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவன். என்னை அங்கே விளையாட விடு என்று கேட்க முடியுமா? அதனையும் விட இன்று வரை அவர் அரசியல் பேசவில்லை.

மேலும் விளங்காத மொழியில் பிரார்த்தனை செய்கிறார்கள் என்றும் விமர்சித்திருந்தார்.

பௌத்த மதத்தினர் கூட பாளி மொழியில் தான் பிரார்த்தனைகளை மேற்கொள்கிறார்கள். அதிலென்ன தவறு?

- க. அன்பழகன்

உயிரை உருக்கி நெய்யாக வார்த்தவர்கள்

மாவீரர்கள்! யார் இவர்கள்?
தன்னலம் கருதாத தியாகிகள்!
தமிழ்நலம் கருதிய ஞானிகள்!
எங்களுக்காக தங்கள்
உயிரையே துறந்த துறவிகள்!
தமிழர் இதயங்களில் என்றும்
நிலைத்து வாழும் தெய்வங்கள்!
கடலிலும் தரையிலும் காற்றிலும்
கலந்து இருப்பவர்கள்!
எங்கள் சுவாசத்தினூடக
எம் உதிரத்தில் கலந்து
எம் உணர்வுகளைத் தட்டி எழுப்பியவர்கள்!
விடுதலைத் தீ அணைந்து போகாமல்
தம் உயிரை உருக்கி
நெய்யாக வார்த்தவர்கள்!
தாம் உருகி உலகத்திற்கு
ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்திகள்!
கல்லறைக்குள் உறங்குகின்ற
கார்த்திகைப் பூக்கள்!
சொல்லால் விளக்க முடியாத புதிர்கள்!
தூங்கிக் கொண்டிருந்த தமிழனின்
துயில் எழுப்பி!
துயிலும் இல்லங்களில்
மீளாத் துயில் கொள்பவர்கள்!
தமிழர் இதயங்களில்
ஒளியேற்றிக் கொண்டிருக்கும்–என்றும்
அணையாத நந்தா விளக்குகள்!
உலகத்தின் மனச்சாட்சியை
உலுப்பி விட்ட உத்தமர்கள்!
சாவுக்கு தேதி குறித்த
சாகா மறவர்கள்!
தமிழன் என்றொரு இனமுண்டு!
தனியே அவர்கொரு குணமுண்டு!–என்று
தரணிக்கு உணர்த்திய
தாயகப் புதல்வர்கள்!
உலகத் தமிழனை உயர்த்தி வைத்த
உன்னத மறவர்கள்!
இவர்களுக்கு முதல் உண்டு!–ஆனால்
முடிவில்லை...
ஆம் மாவீரன் சங்கரிலே
தொடங்கியது தியாகம்!
ஈழம் விடிந்த பின்பும்
முடியுமா இவர்களின் ஈகம்!
காத்து நிற்பார்கள் ஈழத்தின்
எல்லையை காலாகாலம்!
மாவீரர்களே! உங்கள்
கல்லறைகள் கருத்தரிக்கும்!
அதில் இருந்து ஆயிரமாயிரம்!
வேங்கைகள் தோன்றுவார;கள்!
அவர்களால் உங்கள்
தாகங்கள் தீர்க்கப்படும்!
உங்கள் தியாகத்திற்கு!
நீங்கள் நிர்ணயித்த
விலைதான் பேசப்படும்!
தமிழர் உரிமைகளைப் பேரம் பேச
நாங்கள் தயாரில்லை!
உங்கள் எண்ணங்கள் நிறைவேற்றப்படும்!
இது உங்கள் கல்லறைகள் மேல்
நாம் செய்யும் சத்தியம்!!!
தினமும் உங்கள் உணர்வுகளோடு
பேசிக் கொண்டிருக்கும் எம் தலைவன்
இதைச் சாதித்தே தீருவார்!
ஓவ்வொரு கார்த்திகை இருபத்தியேழிலும்!
உங்கள் துயிலும் இல்லங்களுக்கு
பூக்களோடும் பாக்களோடும்! வரும் நாம்!
மிக விரைவில் வருவோம்!
வெற்றிச் செய்தியோடு!
ஐக்கிய நாடுகள் சபையிலே!
புலிக்கொடி பறக்கும்!
தமிழ் குடி சிறக்கும்.
"தமிழரின் தாகம்! தமிழீழத் தாயகம்"

- கவிநயன்

மாவீரர்களின் நினைவுக்காய்..

தமிழினத்தின் கண்ணீரை
உங்கள் உதிரத்தால் கழுவிவிட்டு
எங்கள் கண்களெல்லாம் மழையாக்கி
கவலையற்று உறங்குகிறீர்...
கார்த்திகையில் ஓர் நாள்
ஆம்..! இருபத்தியேழாம் நாள்
தமிழினத்தின் கவலை நீக்க
உயிரையே அர்ப்பணித்த
எம் மண்ணின் காவியங்கள்
உங்களை நாம் வணங்கிடும் நாள்.....
எம் மண்ணில் ஒளிகொடுக்க
தம் உயிரையே மெழுகாக்கி உருகிவிட்ட
ஈழத்தின் வேங்கைகளை
எழுச்சியுடன் நினைத்திடும் நாள்....
மாவீரர் நீங்களெல்லாம் நம் மனமெல்லாம்
நிறைந்திடுவீர்.....
ஈழத்தின் நிலங்களிலே கார்த்திகைப் பூக்களாய்
மலர்ந்திடுவீர்.....
எதிரியின் படையெடுப்பை இயற்கையாய்
நின்று எதிர்த்திடுவீர்.....
மலரும் தமிழீழத்தில் மகிழ்ச்சியுடன்
குழந்தைகளாய் நீர் பிறந்திடுவீர்...
நீங்கள் தந்த உயிர்களின் எண்ணிக்கையோ
இருபத்திரெண்டாயிரத்தின் மேல்....
எடுத்த இலட்சியத்தில் உம் உறுதி
இருபத்திரெண்டாயிரம்
இமையமலைகளுக்கு மேல்....
கொண்ட கொள்கையிலே
தளராது உம் உயிர் தந்தீர்.....
அதனாலே எதிரிக்கோ
உறக்கமில்லா இரவு தந்தீர்.....
தலைவனின் கண்களுக்கு நீங்கள்
பார்வயுமாய்.....
தலைவன் கைகளிலே நீங்கள்
துப்பாக்கியுமாய்.....
தலைவனின் சிந்தனையில் நீங்கள்
எண்ணங்களாய்... ...
தலைவனின் செயல்களுக்கு நீங்கள்
செயல் வடிவங்களாய்... ...
என்றென்றும் இருந்து
எங்களுயிர் காத்து நின்றீர்.....
இன்று எங்களுக்காய்
கல்லறையில் தீபங்களாய் ஒளிருகின்றீர்.....!

- இளங்கவி

"God Bless All"

ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்

ஜோதிஸ்/பண்டித் டி.சாஸ்திரி

VEL SUPERMART
834 LONDON ROAD,
THORNTON HEATH POND
CR7 7PA

Tel: 07960077934

(Note: All matters will be kept confidently)
TIMINGS: 8.00 am - 9.00pm (ALL DAYS OF A WEEK)

கைரேகை, சாமுந்திரிகாஇலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாக கணித்து வழங்குவார்.

கல்வி, வேலை வியாபாரம், காதல், கணவன் மனைவி ஒற்றுமை, திருமணப் பிரச்சனை தீர, தொழில் முடக்கம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அதிஸ்டக் கற்கள், கோர்ட் பிரச்சனை, உடல் நலக்குறைவு, லாட்டரி அதிஸ்டம், பில்லி சூனியம், மந்திரம், செய்வினை ஜனவசிகம், செய்வினையால் பாதிப்படைந்தவர்களுக்கு பரிகாரம் வழங்கப்படும்.

அனைத்து விதமான தோசங்களுக்கும் லக்சுமி பூசை மூலம் பரிகாரம் வழங்கப்படும்.

திருமணப் பொருத்தம் குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.

பிறந்த குழந்தைகளுக்கு சாதகம் இலவசமாகக் கணித்துக் கொடுக்கப்படும்.

குழந்தைகளுக்கு பாலகிரக இயந்திரம் இலவசமாகத் தரப்படும்.

ஒருமுறை சந்தியுங்கள்.

SERVICE: TAMIL, HINDI, ENGLISH & OTHER LANGUAGES.